# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1819/46 - 2013 ජූලි මස 19 වැනි සිකුරාදා - 2013.07.19

*1819/46 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 21/1978* (xii).

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றாகக் கருதப்பட்டதான கட்டளையாகவுள்ள (2009, யூன் 18 ஆந் திகதிய 1606/26 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) இலங்கை, மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தைத் தாபிக்கும் கட்டளையை அதற்கான அட்டவணையில், அத்தகைய அட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற "கட்டடக்கலைப் பீடம்" என்னும் விடயத்தில், அதன் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவுகளின் முடிவில் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் திருத்துகின்றேன் :-*

"*4. ஒருங்கிணைக்கப்பட்ட வடிவமைப்புப் பகுதி*".

*திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க,*
*உயர்கல்வி அமைச்சர்.*

*கொழும்பு,*
*2013, யூலை 18.*

*8- 221*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.